1994 மே 2]

என்கின்ற அளவிலே மின்சார உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது கமலாபுரம் மற்றும் குத்தாலம் போன்ற பகுதிகளில் எல்லாம் அதிகமான இயற்கை எரிவாயு எரிந்துகொண்டு இருக்கின்ற சூழ்நிலையில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் உற்பத்தியைக் கூடுதலாக்கும் எண்ணத்துடன் இன்னும் அதிகமாக மின்சார உற்பத்தியைப் பெருக்குகின்ற ஒரு வாய்ப்பு இருப்பதால், மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்கின்ற அளவுக்கு அங்கே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நரிமணத்திலே எரிவாயுவைப் பயன்படுத்தி இரண்டு மின்னாக்கிகள் 5 மெகாவாட் அளவிலே உற்பத்தி செய்யப்பட்டு அது செயலிலே இருந்துவருகிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே இப்பொழுது பிள்ளைபெருமாள்நல்லூரிலே 300 மெகாவாட் திறன் கொண்ட, இதைப்போன்ற ஒரு மின்னாக்கி எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தைத் துவக்குவதற்காக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த மின்னாக்கிகளைச் செயல்படுத்துவதற்கான எரிவாயுவை அந்தப் பகுதியிலே பயன்படுத்தி வருகிறோம். ஆகவே, எதிர்காலத்திலே புதிய மின்நிலையங்கள் வருகின்றபொழுது உபரியாக இருக்கின்ற எரிவாயுவைப் பயன்படுத்துவதற்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிதான் இப்படிப்பட்ட அனுமதிகளை வழங்கியிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் இதுசம்பந்தமாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 467, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

467—

தருமபுரியில் சோயா பீன்ஸ் பயிரிடுவதை விரிவுபடுத்துதல்

* ***24694***—*திரு. கா.பூ. முனுசாமி:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோயா பீன்ஸ் பயிரிடப்படுவதற்கான வசதியினை தருமபுரி மாவட்டத்தில் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சோயாபீன்ஸ் பயிரிடப்பட்டு வருகிறது. தருமபுரியில் 1993-94-ம் ஆண்டு 1741 எக்டேரில் சோயாபீன்ஸ் பயிரிடப்பட்டது. சோயாபீன்ஸ் உட்பட எல்லா எண்ணெய்வித்து பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் எண்ணெய்வித்து பயிர் செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு சான்று விதை மற்றும் உண்மைநிலை விதைகளுக்கு குவிண்டாலுக்கு முறையே ரூ.200/- மற்றும் ரூ.100/- மானியமாக அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் சிறுதளை விநியோகம் 90 சதவிகிதம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10 -30

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா பீன்ஸ் பயிரிடுவதை விரிவுபடுத்தும் வகையிலே தனியார் நிறுவனமான சக்தி சோயாஸ், தர்மபுரி மாவட்டத்தில் மிகப் பெரிய திட்டத்தைக் கொண்டு வந்து அமல்படுத்திக் கொண்டிருக்கிறது. தனியார் நிறுவனம் போட்டியாக அமல்படுத்திக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், மாண்புமிகு அமைச்சரவர்கள் மேலும் மானியம் வழங்கி, இதை அதிக அளவில் பயிரிடும் அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா பீன்ஸ் பயிரிடும் பரப்பை அதிகரிக்க வேண்டும், அதன் வாயிலாக எண்ணெய் வித்துக்கள் துறையில் புதியதொரு சகாப்தத்தைப் படைக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, தர்மபுரி மாவட்டத்தில் 1991-92 ஆம் ஆண்டு 174 எக்டேரில் பயிரிடப்பட்டது. அடுத்த ஆண்டு, 1992-93-ல் 769 எக்டேரில் பயிரிடப்பட்டது. கடந்த 1993-94ல் 1748 எக்டேரில் சோயா பீன்ஸ் பயிர் தர்மபுரி மாவட்டத்திலே பயிரிடப்பட்டு வருகிறது. வருகின்ற

1994 மே 2]

ஆண்டு இதனுடைய பரப்பளவு கூடுகின்ற அளவுக்கு, பல்வேறு திட்டங்களைத் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு செய்து வருகிறது என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா பீன்ஸ் என்பது ஒரு குறுகிய காலப் பயிர். சிறு விவசாயிகள் கொண்ட தருமபுரி மாவட்டத்தில் மேட்டுப் பகுதிகள் அதிகமாக உள்ளதால் இந்த ஆண்டு 1748 எக்டேர் நிலப்பரப்பில் பயிரிடுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறி இருக்கிறார்கள். மேலும் அதிகமாக ஊடுபயிராக இதைப் பயிரிடுவதற்குரிய சூழ்நிலையை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்படுத்தித் தருவதோடு, விதைகள் உடனுக்குடன் கிடைக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுப்பாடு இல்லாமல் தேவையான அளவுக்கு உண்மை விதை, சான்று விதை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதேநேரத்தில் 90 சதவிகிதம் மானியத்தில் இலவச சோயாபீன்ஸ் விதைப் பைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அங்கே ஏராளமான கரும்பு விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்து வருகிறார்கள். கரும்புத் தோட்டங்களில் ஊடு பயிராக இதைப் பயிரிடுவதற்கு அந்த விவசாயிகளுக்கு மானியம் வழங்கி, ஊக்குவிக்க ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா பீன்ஸ் பயிரை தனிப் பயிராகவும் பயிரிடலாம். அதைப்போல கரும்பில் ஊடு பயிராகவும் பயிரிடலாம். கரும்புப் பயிரில் ஊடு பயிராகப் பயிரிடுகின்றபோது சோயா பீன்ஸ் வேரிலே நைட்ரஜன் முடிச்சுகள் இருக்கும். அந்த முடிச்சுகள் கரும்பு வளர்வதற்கு ஊக்கமும், அதற்கு வேண்டிய உரத்தையும் தரும். எனவே கரும்பில் ஊடு பயிராகப் பயிரிடுவது மிகப் பொருத்தமானது. அப்படிப் பயிர் இடக்கூடிய விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும், பயிற்சி வழங்கப்படும், அரசினுடைய சலுகைகளும் தரப்படும்.